# Tamil Murli Quiz 25-11-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

***Q.1)*** **<u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>**
**அனைவருக்கும் எந்த மகிழ்ச்சி தரும் செய்தியை சொல்ல வேண்டும் என்று பாபா கூறுகிறார்?**

- **A.** இப்போது தெய்வீக ராஜ்ஜியம் ஸ்தாபனை ஆகிக்கொண்டிருக்கிறது
- **B.** பதீதர்களை பாவனம் ஆக்குவதற்காக தந்தை வந்து விட்டார்.
- **C.** இது கடைசி பிறவி. விநாசம் நம் எதிரிலேயே உள்ளது. இப்போது நாம் வீட்டிற்கு வாபஸ் போக வேண்டும்.
- **D.** இப்போது தூய்மையான உலகம் ஸ்தாபனை ஆகிக்கொண்டிருக்கிறது

***Q.2)*** **<u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>**
**இராவணனின் சாபம் எப்போது கிடைக்கிறது?**

- **A.** மனைவி, மக்கள் போன்ற தேகதாரிகளின் மேல் பற்று வரும் போது
- **B.** ஸ்தூல பொருட்கள், வைபவங்கள் முதலியவற்றின் மேல் பற்று வரும் போது
- **C.** பணத்தின் மேல் பேராசை வரும் போது
- **D.** தேக அபிமானிகள் ஆகும் போது

***Q.3)*** **<u>சரியா? தவறா?:</u>**
**மனிதர்கள் நினைக்கின்றனர் பரமாத்மா ஞானக்கடலாக இருப்பதால் அனைவரின் மனதிற்குள் இருப்பதை, அவர்கள் செய்யும் கர்ம-விகர்மங்களை எல்லாம் அறிந்திருக்கிறார் என்று. இது சரியா?**

- **A.** சரி
- **B.** தவறு

***Q.4)*** **<u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>**
**இப்பொழுது நாம் எதை நிச்சயம் செய்ய வேண்டும் என்று பாபா கூறுகிறார்?**

- **A.** நாம் வீட்டிற்கு செல்ல வேண்டும். ஆகவே எந்த பாவ கர்மங்களையும் செய்ய கூடாது
- **B.** நமக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கக்கூடியவர் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை
- **C.** நம்முடைய கணக்கு வழக்குகளை முடிக்காமல் நாம் வீட்டிற்கு வாபஸ் செல்ல முடியாது
- **D.** ஆத்மா தான் இங்கே கர்ம ஷேத்திரத்தில் சரீரத்தை எடுத்து பார்ட் முழுவதையும் நடிக்கிறது

***Q.5)*** **<u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>**
**இச்சமயம் ________________________ ஒருவர் கூட முழு உலகத்திலும் இருக்க முடியாது**

- **A.** பகவான் தந்தையை யதார்த்தமாக தெரிந்தவர்
- **B.** பூஜைக்குரியவர்
- **C.** ஆத்மாவைப் பற்றி முழுமையாக தெரிந்தவர்
- **D.** படைப்பவர்-படைப்பு பற்றி சரியாகத் தெரிந்தவர்

***Q.6)*** **<u>சரியா? தவறா? :</u>**
**குமாரிகளின் வருமானத்தை வைத்து தாய் தந்தையர்கள் சாப்பிட மாட்டார்கள். ஆனால் தற்சமயம் பட்டினியாக ஆகிவிட்டனர் என்றால் குமாரிகளும் கூட சம்பாதிக்க வேண்டி உள்ளது.**

- **A.** சரி
- **B.** தவறு

***Q.7)*** **<u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>**
**இப்பொழுது இங்கே எந்த காரியம் நடக்க முடியாது என்று பாபா கூறுகிறார்?**

- **A.** அனேக தர்மங்கள் சேர்ந்து ஒன்றாக ஆவது
- **B.** அனேக தேசத்தவர்கள் சேர்ந்து ஒரு நாட்டவர்களாக ஆவது
- **C.** உலகில் உள்ள எந்த மனிதரும் சொர்கத்தை ஸ்தாபனை செய்வது
- **D.** முழு உலகிலும் சாந்தியை ஸ்தாபனை செய்வது

***Q.8)*** **<u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>**
**தூய்மையான உலகின் எஜமானர் ஆவதற்காக ______________________________ .**

**A.** ◯ பாபாவின் ஸ்ரீமத் படி நடக்கவேண்டும்

**B.** ◯ அனேகரை பாபாவின் குழந்தைகளாக ஆக்கும் சேவை செய்ய வேண்டும்

**C.** ◯ இந்த கடைசி பிறவியில் தூய்மையாக வேண்டும்

**D.** ◯ இந்த உலகில் நமக்கு கிடைத்துள்ள அனைத்தையும் பாபாவிற்கு அர்ப்பணம் செய்து விட்டு ட்ரஸ்டி ஆகி விட வேண்டும்.

***Q.9)*** **சரியா தவறா என்று குறிக்கவும் :**
**பக்தி மார்கத்தில் எவ்வளவு மந்திரங்கள் ஜெபிக்கின்றனர்..ராம் ராம் என்று சொல்லி மீனுக்கு உணவு கொடுக்கின்றனர். எறும்புக்கு உணவு கொடுக்கின்றனர். இப்போது ஞான மார்கத்தில் இவை எதையும் செய்யத் தேவை இல்லை.**

**A.** ◯ சரி

**B.** ◯ தவறு

***Q.10)*** **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**ஆத்மாவை பிரகாசிக்க செய்வதற்காக பரமாத்மா நினைவு மூலம் ___________________ முடித்து விடுங்கள்.**

**A.** ◯ பாவங்களை

**B.** ◯ அனைத்து விகர்மங்களையும்

**C.** ◯ மனதில் உள்ள குழப்பங்களை

**D.** ◯ அனைத்து கணக்கு வழக்குகளையும்